
**<u>உள்ளடக்கம்</u>**


1. அறிமுகம்
2. திணைக்களத்தின் நோக்கு மற்றும் செயற்பணி
3. திணைக்களத்தின் பிரதான விடயத்துறைகள்
4. திணைக்களத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு
5. அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, வெற்றிடம் மற்றும் மிகை
6. 2017 இன் வரவு செலவுத்திட்ட மதிப்பீடு
7. திணைக்களத்தின் பிரிவுகளும், ஒழுங்கமைப்பும்
8. 2017 ஆம் ஆண்டின் திணைக்களத்தின் முன்னேற்றம்
9. சவால்கள் மற்றும் ஏனைய தடைகள்
10. செயலாற்றுகையை உயர் மட்டத்திற்குக் கொண்டுவருவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்


## 1. அறிமுகம்

அரசாங்க வேலைகள் திணைக்களத்தின் உப திணைக்களமொன்றாக 1849 ஆம் ஆண்டு கொழும்பு ஐந்துலாம்புச் சந்தியதில் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் பிற்காலத்தில் அதாவது 1928 ஆம் ஆண்டு முதல் கொலன்னாவை தெமட்டகொட வீதியில் பெற்றோலியக் கூட்டுத்தாபன வளாகத்திற்கு அருகே தாபிக்கப்பட்டுள்ளது.




**அரசாங்க தொழில்சாலையினால் நிர்மாணிக்கப்பட்ட பாலம்**

ஆரம்பத்தில் பெருந்தெருக்கள், பாலம், நீர்ப்பாசனம், கட்டிடம் நிர்மாணித்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்கியுள்ளதுடன், வெளிநாட்டுப் பொறியியலாளர்களினால் இந்த நிறுவனம் வழிநடாத்தப்பட்டுள்ளது.




**அரசாங்க தொழில்சாலையினால் நிர்மாணிக்கப்பட்ட வெளிச்ச வீடு**

1969 வரை இவ்வாறு இயங்கி வந்த அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் அதன் மூலம் நிறைவேற்றியுள்ள பெருந்தெருக்களை நிர்மாணித்தல், பராமரிப்பு, கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு போன்ற சிவில் பொறியியல்சார் பணிகளுக்கு பெருந்தெருக்கள் திணைக்களம் மற்றும் கட்டிடங்கள் திணைக்களமும் இயந்திரப் பொறியியல்சார் பணிகளை நிறைவேற்றுவதற்காக “ஏ” தரத்தைச் சேர்ந்த திணைக்களமாக அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களமும் 1971.01.10 ஆம் திகதி தாபிக்கப்பட்டன.

அன்று முதல் பல்வேறு அரச நிறுவனங்களை வழிநடாத்துவதற்குத் தேவையான இயந்திரப் பொறியியல்சார் உதவிச் சேவைகளை வழங்குவதற்கு அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் பொதுத் திறைசேரியின் முற்பணக் கணக்கு முறையின் கீழ்

பேணிவரப்படுகின்றது. காலத்திற்கு ஏற்றவாறு அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் காணிகள் மற்றும் காணிகள் அபிவிருத்தி அமைச்சு, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் பொது வசதிகள் அமைச்சு, வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, வீடமைப்பு, நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சு மற்றும் இன்று வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் தொடர்ச்சியாக இயங்கிவருகின்றது.

தற்போது இலங்கையில் நீர் முகாமைத்துவ கதவுகளை நிர்மாணித்துப் பொருத்தும் சந்தையில் முன்னுரிமை அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்திற்கு உரித்தாகியுள்ளது. அண்மைக் காலத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பூர்த்தி செய்யப்பட்ட பல பாரியளவிலான நீர்க் கருத்திட்டங்களின் நீர்க் கட்டுப்பாட்டு கதவுகள் அனைத்தும் நிர்மாணித்துப் பொருத்தப்பட்டிருப்பது அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தினாலாகும். வெஹெரகல, தெதுறு ஓயா, பே ஆறு மற்றும் ரம்புக்கன் ஓயா நீர்த்தேக்க கருத்திட்டங்கள் இவற்றில் சிலவாகும்.

அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தினால் இயந்திரப் பொறியியல் துறையில் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகள் மற்றும் சேவைகள் நிறைவேற்றப்படுவது திறைசேரியின் மேற்கொண்ட வேலைகள் முற்பணம் மற்றும் களஞ்சிய முற்பணக் கணக்கு முறையின் கீழாகும் என்பதனால் இந்தத் திணைக்களத்தை அரச துறையின் வர்த்தக நடவடிக்கைகளை வழிநடாத்துகின்ற விசேட திணைக்களமொன்றாக அறிமுகம் செய்ய முடியும்.

உற்பத்தி மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு ஈடுபடுத்தப்படுகின்ற திணைக்களம்சார் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்துவதற்கு மாதாந்தம் ரூ.மி. 15 ஆன தொகையை வாடிக்கையாளர்களிடமிருந்து உழைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு திறைசேரி நிதி வழங்குவதில்லை.

இலங்கை தேசிய தரக் கொள்கைக்கு அமைய செயற்பட்டு 2013 ஆம் ஆண்டு அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழை வென்றெடுத்தது. இந்தச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் அரசாங்க தொழில்சாலைகள் திணைக்கத்தின் வினைத்திறனை மேம்படுத்திக் கொள்ள முடிந்துள்ளதுடன், எமது வாடிக்கையாளர் சேவைகளில் வளர்ச்சியையும் ஏற்படுத்த முடிந்தது.

## 2. திணைக்களத்தின் நோக்கு மற்றும் செயற்பணி

### நோக்கு

“உள்ளக மற்றும் வெளிவாரி நுகர்வுச் சேவைகளை பூகோள போக்குகளுக்கு இசையக்கூடியவாறு தரமானதாக உயர் மட்டத்திற்கு மேம்படுத்தல்”

### செயற்பணி

“பொறியியல் இயந்திரசாதன துறையின் வேலைகள், உற்பத்தி, மதியுரைச் சேவைகள் மற்றும் பயிலுனர்கள், கலைஞர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், பட்டத்தை எதிர்பார்த்திருக்கும் பயிலுனர் மற்றும் இயந்திர பொறியியலாளர்களுக்கு தொழிற்சாலையின் வேலைத்தளத்தில் உற்பத்தி மற்றும் சேவைகள் தொடர்பான செயல்ரீதியான பயிற்சியை பெற்றுக் கொடுத்தல் ஆகிய வேலைகள் மற்றும் சேவைகளை ஆற்றுதல்.”

## 3. திணைக்களத்தின் பிரதான விடயத்துறைகள்

### உற்பத்தித் துறை

**அரசாங்க மற்றும் தனியார் துறைக்கு உலோக மற்றும் பலகை மூலமான தளபாட உற்பத்திகள்**

1. நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ உபகரணங்கள், வைத்தியசாலை உபகரணம் உற்பத்தி
2. அலுவலகம், கல்வி மற்றும் நீதிமன்றங்களுக்கான தளபாட உற்பத்திகள்
3. பெருந்தெருக்கள் மற்றும் ஏனைய நிர்மாணிப்புக்களுக்கு பல்வேறு வார்ப்பட உற்பத்திகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும் அம்சங்களை உற்பத்தி செய்தல்.
4. பொலிஸ் திணைக்களத்திற்கு உத்தியோகபூர்வ பட்டி, நட்சத்திரம், இலக்கத் தகடுகளை உற்பத்தி செய்தல். தபால் திணைக்களத்திற்கு தினக் குற்றிகள், ஆண்டுக் குற்றிகளை உற்பத்தி செய்தல்.

### நிர்மாணத் துறை (கனரக காய்ச்சி ஒட்டுதல்)

1. நீர்ப்பாசன கதவுகள் மற்றும் நீர்த்தேக்கங்களுக்கு பல்வேறு வகையிலான கதவுகள் மற்றும் அம்சங்களை நிர்மாணித்தல், உற்பத்தி மற்றும் பொருத்தல்.
2. வரலாற்று ரீதியாக முக்கியமான விஹாரைகள் மற்றும் மற்றும் புத்தர் சிலைகளுக்கான பாதுகாப்பு வேலி மற்றும் பாதுகாப்புக்கான கூரைகளை நிர்மாணித்தல்
3. கட்டிடங்களில் பலகை மற்றும் உலோக கூரைகளை நிர்மாணித்தல்
4. அரசாங்க வைபவங்களில் பங்கேற்கும் விசேட அதிதிகளுக்கான விசேட மேற்புற மறைப்புகள், மேடைகள், கூடங்களை ஏற்பாடு செய்தல்
5. வெளிநாடுகளிலிருந்து வருகைதரும் நாட்டுத் தலைவர்கள், அதிதிகளை வாவேற்கும் இடங்களை மெங்கசெய்கல்.

## அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம்

### புதுப்பித்தல் மற்றும் பராமரிப்புத் துறை

1. வைத்தியசாலைகள் மற்றும் ஆயுர்வேத நிறுவனங்களின் இயந்திரங்கள், உபகரணங்களை புதுப்பித்தல்
2. சிறைச்சாலைகளின் இயந்திரங்கள், உபகரணங்களை புதுப்பித்தல்
3. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ அணைக்கட்டுக்களினதும், நீர்த்தேக்கங்களின் கதவுகள் மற்றும் அம்சங்களை புதுப்பித்தல்
4. அரச மற்றும் பகுதியளவிலான அரசதுறை அலுவலகங்கள் மற்றும் வெளிக்கள தளபாடங்களை புதுப்பித்தல் மற்றும் மெருகூட்டல்.

### இயந்திரப் பொறியியல் சேவைகள்


1. பொறியியல் பட்டப் படிப்பை மேற்கொள்வோர், பல்வேறு பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்களுக்கு பயிற்சிளித்தல்.
2. அரச நிறுவனங்களின் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களுக்கான அறிக்கைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
3. அரச நிறுவனங்களின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் தொழில்நுட்ப துறைசார் உறுப்பினர்களாக பங்கேற்றல்.

## 3.1 அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான உற்பத்திப் பணிகளும் வழங்கப்படுகின்ற சேவைகளும்

**சேவைகள்**

- மருத்துவமனைகளுக்கான தளபாட உபகரணங்கள், கருவிகளை உற்பத்தி செய்தல்.
- நீர் முகாமைத்துவத்திற்கான காய்ச்சி உருக்கும் இரும்பு சம்பந்தமான உற்பத்திகள், உள்வாங்கும் கதவுகள், அணைக்கட்டுக் கதவுகள் போன்ற பலதரப்பட்ட கதவு வகைகள்.
- காய்ச்சி உருக்கும் இரும்பு சம்பந்தமான உற்பத்திகள் (Manhole நிர்மாணிப்பும் அவற்றுக்கான மூடிகளும் நீர் முகாமைத்துவ உபகரணங்கள்).
- தளபாடம் மற்றும் ஏனைய மர உற்பத்திகள்
- வீதித் தடைகள் மற்றும் வீதிச் சமிக்ஞைப் பலகைகள்
- இயந்திர சாதன சைரன்கள், ஆண்டு, மாதம் மற்றும் நாட்கள் போன்ற பகுதிகளை உள்ளடக்கிய தபால் முத்திரைகள்.
- ஸ்கிறீன் அச்சு, டிஜிட்டல் அச்சு, அறிவித்தல் பலகைகள், மர அலங்கார வேலைகள், மற்றும் அது சம்பந்தமான தேவைகள் எம்போஸ் வேலைகள்
- பவுடர் கோடிங் மற்றும் இயந்திர சாதனங்களுக்கான வர்ணம் பூசும் வேலைகள்
- சகல வகையிலுமான பார்டிஷன்கள் (அறைகளை ஒதுக்கும் வேலைகள், அலுமினியம் கதவுகள், ஜன்னல்களை உற்பத்தி செய்தல்)
- சுவர்களுக்கான அலங்கார வேலைகள்
- வெட்டுதல், துளையிடல், சுற்றுதல் போன்ற பல்வேறு காய்ச்சியொட்டும் வேலைகளும்
- பாரிய தயார் செய்தல் வேலைகள், இலகுரக தயார் செய்தல் வேலைகள் மற்றும் கொல்லர் வேலைகள்
- இயந்திர சாதனங்களைப் பொருத்துதல்
- இயந்திர சாதனங்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் மற்றும் சேவைகளை ஆற்றும் நடவடிக்கைகள்
- இயந்திரசாதனங்களை புதுப்பித்தல், சேவிஸ் செய்தல்
- மின் உபகரண வேலைகள்
- மின் உபகரணம் பொருத்தல் மற்றுமு் புதுப்பித்தல்
- இலக்ட்ரோ பிளேட்டிங் வேலைகள்
- பட்டயம்பெற்ற இயந்திரப் பொறியியலாளர் பட்டத்தை கற்பவர்களுக்குத் தேவையான பயிற்சியை பெற்றுக் கொடுத்தல்
- பொறியியல் பட்டத்தை கற்பவர்கள் மற்றும் பல்வேறு பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்களுக்கான பயிற்சிகளும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

## 4. திணைக்களத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு




சி.இ.அ. – சிரேஷ்ட இயந்திர அத்தியட்சகர்
பி.தி.க – பிரதம திட்டமிடல் கலைஞர்
அபி.அலு. – அபிவிருத்தி அலுவலர்
இ.அ. - இயந்திர அத்தியட்சகர்
க.அ.உ. – கனிய அளவை உதவியாளர்
அ.மு.உ. – அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்
அ.சி. – அலுவலக சிற்றூழியர்

வே.மே. – வேலை மேற்பார்வையாளர்
பி.நே.க.எ. - பிரதம நேரக் கணிப்பீட்டு எழுதுனர்
நே.க.எ. – நேரக் கணிப்பீட்டு எழுதுனர்
வே.எ. - வேலைத்தள எழுதுனர்
பகு.க. – பகுதியளவிலான கலைஞர்
வே.உ.த. – வேலைத்தள உதவியாளர்

த.தொ.தொ.உ. -தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்
சி.இ.அ.வ. சிரேஷ்ட இயந்திர அத்தியட்சகர் வழங்கல்.
சி.இ.அ.பா. சிரேஷ்ட இயந்திர அத்தியட்சகர் பாதுகாப்பு
நி.அ. – நிருவாக அலுவலர்
வ.செ.உ. – வரவு செலவுத்திட்ட உதவியாளர்
ந.அ. – நலன்புரி அலுவலர்
த.தொ.தொ.அ. – தகவல் தொடர்பாடல், தொழில்நுட்ப அலுவலர்

## 5.அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, வெற்றிடம் மற்றும் மிகை

| விபரம் / பதவியும், மட்டமும் | ஏற்புடைய சேவை | அங்கீகரிக்கப் பட்ட பதவிகள் | தற்போது சேவையிலுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| | | நிரந்தர | நிரந்த | |
| **சிரேஷ்ட மட்டம்** | | | | |
| பணிப்பாளர் நாயகம் | இ.பொ.சே. | 1 | 1 | 0 |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் | இ.பொ.சே. | 1 | 0 | 1 |
| பணிப்பாளர் | இ.பொ.சே. | 3 | 3 | 0 |
| பிரதம பொறியியலாளர் | இ.பொ.சே. | 5 | 0 | 5 |
| பணிப்பாளர் (நிருவாகம்) | இ.நி.சே. | 1 | 0 | 1 |
| பிரதம கணக்காளர் | இ.க.சே. | 1 | 0 | 1 |
| பிரதம உள்ளக கணக்காய்வாளர் | இ.க.சே. | 1 | 0 | 1 |
| பிரதி /உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | இ.நி.சே. | 1 | 1 | 0 |
| பிரதிப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | இ.த.தொ.தொ.உ. சே. | 1 | 0 | 1 |
| இயந்திரப் பொறியியலாளர் | இ.பொ.சே. | 11 | 09 | 2 |
| மின் பொறியியலாளர் | இ.பொ.சே. | 1 | 0 | 1 |
| சிவில் பொறியியலாளர் | இ.பொ.சே. | 1 | 1 | 0 |
| கணக்காளர் | இ.க.சே. | 2 | 2 | 0 |
| சட்ட அலுவலர் | திணைக்களம்சார் | 1 | 0 | 1 |
| **சிரேஷ்ட மட்டத்தின் கூட்டுத்தொகை** | | 31 | 17 | 14 |
| மூன்றாம் நிலை மட்டம் | | | | |
| நிருவாக அலுவலர் | அ.மு.உ.சே. | 1 | 0 | 1 |
| பிரதம திட்டமிடல் கலைஞர் | இ.தொ.சே. | 1 | 0 | 1 |
| சிரேஷ்ட இயந்திர அத்தியட்சகர் | இ.தொ.சே. | 7 | 2 | 5 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் | இ.த.தொ.தொ.சே. | 1 | 0 | 1 |
| **மூன்றாம் நிலை மட்டத்தின் கூட்டுத்தொகை** | | 10 | 2 | 8 |

<table>
<tr><td colspan="5">இரண்டாம் மட்டம்</td></tr>
<tr><td>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்</td><td>இ.த.தொ.தொ.சே.</td><td>6</td><td colspan="2">0</td><td>6</td></tr>
<tr><td>அபிவிருத்தி அலுவலர்</td><td>அபிவிருத்தி அலுவலர் சேவை</td><td>15</td><td colspan="2">11</td><td>4</td></tr>
<tr><td>சட்ட உதவியாளர்</td><td>இணைந்த அலுவலர்</td><td>1</td><td colspan="2">1</td><td>0</td></tr>
<tr><td>திட்டமிடல் கலைஞர்</td><td>இ.தொ.சே.</td><td>5</td><td colspan="2">3</td><td>2</td></tr>
<tr><td>இயந்திர அத்தியட்சகர்</td><td>இ.தொ.சே.</td><td>25</td><td colspan="2">14</td><td>11</td></tr>
<tr><td>மின் அத்தியட்சகர்</td><td>இ.தொ.சே.</td><td>1</td><td colspan="2">0</td><td>1</td></tr>
<tr><td>சிவில் அத்தியட்சகர்</td><td>இ.தொ.சே.</td><td>1</td><td colspan="2">0</td><td>1</td></tr>
<tr><td>கனிய அளவை உதவியாளர்</td><td>திணைக்களம்சார்</td><td>2</td><td colspan="2">0</td><td>2</td></tr>
<tr><td>கணினி வடிவமைப்புக் கலைஞர்</td><td>இ.த.தொ.தொ.சே.</td><td>1</td><td colspan="2">0</td><td>1</td></tr>
<tr><td>அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்</td><td>அ.மு.உ.சே.</td><td>60</td><td colspan="2">42</td><td>18</td></tr>
<tr><td>வேலைத்தள மேற்பார்வையாளர்</td><td>திணைக்களம்சார்</td><td>35</td><td colspan="2">24</td><td>11</td></tr>
<tr><td>வேலைத்தள உதவியாளர்</td><td>திணைக்களம்சார்</td><td>21</td><td colspan="2">11</td><td>10</td></tr>
<tr><td>வேலைத்தள எழுதுநர்</td><td>திணைக்களம்சார்</td><td>12</td><td colspan="2">6</td><td>6</td></tr>
<tr><td>நேர கணிப்பீட்டு எழுதுநர்</td><td>திணைக்களம்சார்</td><td>12</td><td colspan="2">7</td><td>5</td></tr>
<tr><td colspan="2">இரண்டாம் மட்டத்தின் கூட்டுத்தொகை</td><td>197</td><td colspan="2">119</td><td>78</td></tr>
<tr><td colspan="5">ஆரம்ப மட்டம்</td></tr>
<tr><td>சாரதி</td><td>இணைந்த சாரதி சேவை</td><td>25</td><td colspan="2">14</td><td>11</td></tr>
<tr><td>அலுவலக சிற்றூழியர்</td><td>அலுவலக சிற்றூழியர் சேவை</td><td>16</td><td colspan="2">7</td><td>09</td></tr>
<tr><td>துப்பரவேற்பாட்டு தொழிலாளி</td><td>திணைக்களம்சார்</td><td>6</td><td colspan="2">6</td><td>0</td></tr>
<tr><td>தொழிலாளி நிபுணத்துவ (1-1 வகுப்பு)</td><td>திணைக்களம்சார்</td><td>254</td><td colspan="2">147</td><td>107</td></tr>
<tr><td>தொழிலாளி நிபுணத்துவ (1-11 வகுப்பு)</td><td rowspan="2">திணைக்களம்சார்</td><td rowspan="2">157</td><td>50</td><td rowspan="2">80</td><td rowspan="2">77</td></tr>
<tr><td>தொழிலாளி பகுதியளவில் நிபுணத்துவ (11 வகுப்பு)</td><td>30</td></tr>
<tr><td>தொழிலாளி நிபுணத்துவம் அல்லா</td><td>திணைக்களம்சார்</td><td>94</td><td colspan="2">61</td><td>33</td></tr>
<tr><td colspan="2">ஆரம்ப மட்டத்தின் கூட்டுத்தொகை</td><td>552</td><td colspan="2">316</td><td>236</td></tr>
<tr><td colspan="2">முழு மொத்தம்</td><td>790</td><td colspan="2">454</td><td>336</td></tr>
</table>

## 6. 2017 வரவு செலவுத்திட்ட மதிப்பீடு

### தலைப்பு – 310

**1 ஆம் கருத்திட்டம் - பொது நிருவாகமும், பதவியணி சேவைகளும்**

**2 ஆம் கருத்திட்டம் - உற்பத்தி, தயாரிப்பு, பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் சேவைகள்**

| செலவினம் | மதிப்பீடு ரூ.மி. | செலவினம் (ரூ.மி.) | மீதமுள்ள தொகை (ரூ.மி.) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 100.264 | 98.67 | 1.594 |
| மூலதன செலவினம் | 58.150 | 57.73 | 0.420 |
| முழு மொத்தம் | **158.414** | **156.40** | **2.014** |

**அரசாங்க அலுவலர்களின் முற்பண பீ கணக்கு**

| விபரம் | மதிப்பீடுக்கு (ரூ.மி.) | செலவினம் (ரூ.மி.) |
|---|---|---|
| உச்ச செலவின எல்லை | 38.000 | 38.66* |
| ஆகக் குறைந்த செலவு எல்லை | 26.000 | 31.41● |
| உச்ச வரவு நிலுவை எல்லை | 125.000 | 89.35 |

குறிப்புகள் - * 25/05/2018 அன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது ((BD/AC/ADAC/GEN - 2017 மற்றும் 2018.06.14 திகதியிட்ட கடிதம் )

- குறுக்கு பதிவின் ஊடான வரவு பதிவு காரணமாக உண்மையான மற்றும் மதிப்பிடப்பட்ட செலவுகளுக்கு இடையே வேறுபாடு உள்ளது, ஆனால் அது உச்ச செலவு மதிப்பீட்டை பாதிக்காது.


**களஞ்சிய முற்பணக் கணக்கு**

| விபரம் | மதிப்பீடுக்கு (ரூ.மி.) | செலவினம் (ரூ.மி.) |
|---|---|---|
| உச்ச செலவின எல்லை | 160 | 186.02* |
| ஆகக் குறைந்த செலவு எல்லை | 140 | 198.93* |
| உச்ச வரவு நிலுவை எல்லை | 65 | 20.43 |

குறிப்புகள் - * 25/05/2018 அன்று திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு நாடாளுமன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. (BD / AC / ADAC / GEN - 2017)

## 7. திணைக்களத்தின் பிரிவுகளும், கட்டமைப்பும்

அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் உரித்தான நேர்வரிசை அமைச்சாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு காணப்படுகின்றது. பணிப்பாளர் நாயகம் இத்திணைக்களத்தின் தலைவராவார். மேலதிகப் பணிப்பாளர் உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 790 ஆகும். தற்போது சேவையாற்றி வருகின்றவர்களின் எண்ணிக்கை 454 ஆகும். வெற்றிடங்களின் எண்ணிக்கை 336 ஆகும்.



## 7. 1 நிருவாகப் பிரிவு

**பிரதான பணிகள்**

1) தாபன விதிக் கோவை மற்றும் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற பொது நிருவாக சுற்றறிக்கைகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைகளைப் பின்பற்றி திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற சகல அலுவலர்களினதும் மனித வள முகாமைத்துவம்.

2) நாடளாவிய சேவைகள், இணைந்த சேவைகளின் கீழ் உள்ள திணைக்களத்தின் பதவியணியினர் தொடர்பிலான பதவி உயர்வு, ஒழுக்காற்று, இடமாற்றம் மற்றும் லீவு பற்றிய அறிக்கைகள், நியமனங்களை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பித்தல்

3) திணைக்களம்சார் சேவைகளுக்கு முறையான ஆட்சேர்ப்பு ஒழுங்கு முறைகளைத்தயார் செய்து இற்றைப்படுத்தி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல். மேற்படி அலுவலர்களின் நியமனம், பதவி உயர்வு, உள்ளடக இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் போன்றன.

## 7.2 வேலைகள் பிரிவு

வேலைகள் பிரிவினால் அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் உற்பதிதகள் மற்றும் சேவைகள் ஆற்றப்பட்டு வருகின்றன. இந்தப் பிரிவின் மூலம் திணைக்களம்சார் பதவியணியின் சம்பளம் செலுத்தத் தேவையான வருமானத்தை உழைத்துக்கொள்ளல் மற்றும் திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வெளித் தரப்பினர்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.
அரச மற்றும் துறைகளில் போட்டித்தன்மைமிக்க கேள்வி கோரல் மூலம் பெற்றுக் கொள்ளும் அல்லது வினவுவதன் மூலம் கட்டளையிடப்படுகின்ற சகல இயந்திரப் பொறியியல்சார் பணிகளையும் நிறைவேற்றுவது பிரதான பணியாகும்.
பணிப்பாளரின் (வேலை) கீழ் இந்தப் பிரிவு இயங்கிவருகின்றது. இந்தப் பிரிவினுள் உற்பத்தி வேலைத்தளங்கள் 05 மற்றும் சேவை வேலைத்தளங்கள் 02 இயங்கிவருகின்றன.
பதவியணியானது இயந்திரப் பொறியியலாளர்கள், இயந்திர அத்தியட்சகர்கள், வேலைத்தள மேற்பார்வையாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், வேலைத்தள உதவியாளர்கள், வேலைத்தள எழுதுநர்கள் மற்றும் பயிற்றப்பட்ட/பயிற்றப்படாத கலைஞர்களை உள்ளடக்கியதாக உள்ளது.

- **வேலைகள் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற பிரதான பணிகள்**

  - கனரக காய்ச்சி இணைத்தல் பணிகளும், உற்பத்திகளும்
  - புதுப்பித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் பணிகள்
  - பலகை மூலமான உற்பத்திகளும், பணிகளும்
  - பொறியியல் சேவைகள்

### 7.2.1 கனரக காய்ச்சி இணைத்தல் பணிகள் மற்றும் உற்பத்திகள்

கனரக காய்ச்சி இணைத்தல் பணிகள் மற்றும் உற்பத்திகளின் கீழ் அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பிரதான வேலைகளாக இனங்காண முடிவது நீர் முகாமைத்துவத்துக்கு நீர்ப்பாசன திணைக்களத்தினால் கட்டளையிடப்படுகின்ற வான் கதவுகள், நிறுத்தும் லொக கதவுகள், பிலிப் கதவுகள் மற்றும் ஏனைய வகையிலான நீர்க் கதவுகளை வடிவமைத்தல், தயார் செய்தல், பொருத்தல் மற்றும் புதுப்பித்தலாகும்.
இந்தக் கதவு வகைகள் மற்றும் அம்சங்களை உற்பத்தி செய்வதற்கு வாடிக்கையாளர்களின்

தேவைகளுக்கு ஏற்புடையவாறு இரும்பு உருக்கு வகைகள், துருப்பிடிக்கா இரும்பு, சீனச்சட்டி மற்றும் பலகை போன்ற மூலப் பொருட்கள் இதற்குப் பயன்படுத்திக் கொள்ளப்படும். இன்று அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்திற்கு கிடைக்கின்ற வேலைகளில் சுமார் 70 சதவீதம் இந்த நீர் முகாமைத்துவ கதவுகள் தொடர்பிலான வேலைகள் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளாகும்.

இந்த நீர் முகாமைத்துவக் கதவுகள் மற்றும் அம்சங்களை உற்பத்தி செய்யும் செயன்முறை சம்பந்தமான சகல இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் ஆயுதங்கள், அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் வேலைத்தளங்களுக்கு உரித்தானதாகும் என்பதுடன், அதன் மூலம் உலோக வேலைகளை மேற்கொள்ளல், வெட்டுதல், துளையிடல், இயந்திர பணிகள், காய்ச்சி இணைத்தல் (ரிக் மிக் உட்பட) கேஸ் மூலம் வெட்டுதல், சேன்ட் பிலாஸ்டின் செய்தல், ஸ்ப்ரே வர்ணம் பூசுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள முடியும். கெல்வனைசின் தீட்டுவது மாத்திரம் உயர் தரத்தைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு உற்பத்திப் பொருட்கள் மற்றும் வேலைகளின் காய்ச்சி இணைத்தல் தரப்பரிசோதனைக்கு இலங்கை பொறியியல் நிறுவனகத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட அனுபவம்வாய்ந்த தகைமைவாய்ந்த பரிசோதகர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

- கனரக காய்ச்சி இணைத்தல் பிரிவினால் கட்டிடங்களின் கூரைகள் புதிதாக காய்ச்சி இணைத்து பொருத்தல் மற்றும் புதுப்பித்து பொருத்துவதற்கும், அகற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
- அரச வைபவங்களில் பங்கேட்கும் விசேட அதிதிகளுக்கான விசேட மேடைகள், கூடங்களைள் நிர்மாணிப்பதும், பொருத்துவதும்.
- வெளிநாடுகளிலிருந்து வருகைதரும் விடேச அதிதிகளை வரவேற்கும் இடங்களை நிர்மாணித்தல்.
- மேலும் மருத்துவமனை உபகரணங்களை உற்பத்தி செய்தல், ஆய்வுகூட உபகரணங்களை உற்பத்தி செய்தல், அலுவலக உபகரணங்களை உற்பத்தி செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது.

### 7.2.2 புதுப்பித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள்

- வரலாற்று ரீதியில் முக்கியத்துவமிக்க விஹாரைகள் மற்றும் புத்தர் சிலைகளுக்கு பாதுகாப்பு வேலிகள் மற்றும் பாதுகாப்புக் கூரைகளை நிர்மாணித்தல்
- கட்டிடங்களின் கூரைகளை புதுப்பித்தல்
- வாக்குப் பெட்டிகளை புதுப்பித்தல்
- வழிபாட்டுத் தலங்களின் நுழைவாயில்களை தயார் செய்வதும், பொருத்துவதும்.
- பித்தலை மற்றும் சீனச்சட்டி மூலம் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் விஹாரைகளுக்கு அழகிய வேலிகளை நிர்மாணித்தல்.
- நுழைவாயில் வேலிகளை புதுப்பித்தல்.
- பாதுகாப்பு காவல் அரண்களை நிர்மாணித்தல் மற்றும் பொருத்தல்.
- தளபாடங்களை மெருகூட்டல்
- தார் பொயிலர், தார் இடப்பட்ட உபகரணம் மற்றும் உரிய அம்சங்களை நிர்மாணித்தல்.
- வீதிச் சமிஞ்சை பலகைகளை நிர்மாணித்தல்

### 7.2.3 மரப் பலகை மூலமான உற்பத்திகளும், பணிகளும்

- வாக்குப் பெட்டிகளை நிர்மாணித்தல்
- அலுவலக உபகரணம் தயார் செய்தல்
- நீதி அமைச்சுக்கு நீதிமன்ற தளபாடங்களை நிர்மாணித்தல்.
- தளபாடம் உற்பத்தி

- ♦ பலகையாலான நீர் வடிகட்டிகளை நிர்மாணித்தல்.
- ♦ தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களை மெருகூட்டல் (பொலிஷ் செய்தல்)

### 7.2.4 பொறியியல் சேவைகள்

- ♦ பொறியியல் பட்டத்தை கற்கும் மாணவர்கள் மற்றும் பல்வேறு பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்களுக்கான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- ♦ அரசாங்க நிறுவனங்களின் இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணங்களுக்கான அறிக்கைகளைப் பெற்றுக் கொடுத்தல்
- ♦ தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களுக்கான உறுப்பினர்களைப் பெற்றுக் கொடுத்தல்.

## 7.3 சந்தைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி பிரிவு

மேம்படுத்தல் நடவடிக்கைகள் மூலம் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் புதிய உற்பத்திகளில் ஈடுபடுதல் மற்றும் விளம்பர நடவடிக்கைகளின் மூலம் திணைக்களத்தின் உற்பத்திகளின் விற்பனையை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள இப்பிரிவு நடவடிக்கை மேற்கொள்கின்றது. சந்தைப்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிப்பாளரின் கீழ் இந்தப் பிரிவு செயற்பட்டு வருகின்றது. சந்தைப்படுத்தல், மதிப்பீடு, ஆராய்ச்சி மற்றும் திட்டங்கள் மற்றும் வடிவமைத்தல் அலகுகள் இப்பிரிவின் கீழ் காணப்படுகின்றன.

**பிரதான பணிகள்**

i. நீர்நிலைகளில் நீர் பாயும் கதவுகளை தேவைக்கேற்றவாறு நுகர்வோரின் அவசியத்தன்மைக்கு அமைய வடிவமைத்தல்.

ii. நுகர்வோரின் தேவைக்கு அமைய உற்பத்தி செய்யும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மதிப்பீடுகளைத் தயார் செய்து வெளி நிறுவனங்களுக்கு கேள்விகளை சமர்ப்பித்தல்.

iii. வெளி மற்றும் உள்ளக நுகர்வோரின் தேவைகளுக்கு அமைய வழங்கப்படுகின்ற சேவைகள் மற்றும் உற்பத்திகளுக்கான மதிப்பீடுகளைத் தயார் செய்து சமர்ப்பித்தல்.

iv. நியம உற்பத்தி மற்றும் சேவைகளின் மதிப்பீடுகளை ஆண்டின் ஆரம்பத்தில் தயார் செய்து நுகர்வோருக்கு பெற்றுக் கொடுத்தல்.

v. நுகர்வோரின் உரிய கோரிக்கைகள் தொடர்பில் உடனடி பதில் நடவடிக்கை மேற்கொள்ளல். (மின்னஞ்சல், பெக்ஸ் மற்றும் தொலைபேசி மூலம்)

vi. தற்போதுள்ள பதவியணியை பயன்படுத்தி தேவைப்பாடுகளுக்கு அமைய தாமதம் இன்றி மதிப்பீடுகளைத் தயார் செய்து வழங்குதல்.

## 7. 4 நடவடிக்கைப் பிரிவு

அரசாங்கதொழில்சாலைகள் திணைக்களத்தின் நடவடிக்கைப் பிரிவானது பின்வரும் அலகுகளை உள்ளடக்கியுள்ளது.

- வழங்கல் அலகு
- தகவல் தொழில்நுட்ப அலகு
- பாதுகாப்பு அலகு
- முன்னேற்றம் மற்றும் பயிற்சி அலகு

மேற்படி அலகுகளின் செயற்பணிகள் பின்வருமாறாகும்.

**வழங்கல் அலகு**

வழங்கல் அலகின் செயற்பணியாக இருப்பது அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தினால் பிற நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுக்கின்ற உற்பத்திகள் மற்றும் சேவைகளை முறையாக பேணிவரத் தேவையான மூலப் பொருட்கள் மற்றும்

சேவைகளை உரிய நேரத்திற்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வதாகும்.

வழங்கல் அலகுக்குக் கிடைக்கின்ற உள்நாட்டு கட்டளைகள், களஞ்சியக் கட்டளைகள் மற்றும் மூலதன செலவினங்களை பெறுகை மட்டத்திற்கு அமைய உரிய பெறுகை குழு அல்லது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பித்து பெறுகை நேர அட்டவணைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு பிரதான திட்டங்கள் தயார் செய்யப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றன.

முக்கியமாக சந்தை விலை ஒப்பீட்டு முறை மற்றும் தேசிய போட்டித்தன்மை மிக்க விலை மனுக்களை கோருவதன் கீழ் விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

பருமட்டாக மாதாந்தம் சுமார் 10 மில்லியன் பொருட்கள், பண்டங்கள் மற்றும் சேவைகளின் பெறுகை மேற்கொள்ளப்படுகின்றது.

### தகவல் தொழில்நுட்ப அலகு

தகவல் தொழில்நுட்ப அலகின் செயற்பணியாக இருப்பது அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் கணினி வலையமைப்பை பேணிவருவதும், மேம்படுத்துவதுமாகும். சுமார் 150 கணினிகள் இந்த வலையமைப்பில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், பிரதானமாக கணினி வலையமைப்பின் மூலம் தொழில்சாலை முகாமைத்துவ மென்பொருள் அமுல்படுத்தப்படுகின்றது.

### பாதுகாப்பு அலகு

பாதுகாப்பு அலகின் செயற்பணியாக இருப்பது அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்திற்கு போதியளவில் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் வெளியிலிருந்து கொண்டுவருகின்ற மூலப் பொருட்கள், உற்பத்திப் பொருட்கள் மற்றும் உபகரணம், ஆயுதங்களைப் பரிசீலனை செய்வதும், மீண்டும் கொண்டு வருவதை உறுதி செய்வதுமாகும்.

### முன்னேற்றம் மற்றும் பயிற்சி அலகு

பயிற்சி அலகின் மூலம் அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் வேலைத்தள ஊழியர்கள், பொறியியல் பட்டத்தை கற்கும் மாணவர்கள் மற்றும் பல்வேறு பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்களுக்கான பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

## 7. 5 கணக்குகள் பிரிவு

அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்திற்கு வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகள் தொடர்பில் மற்றும் அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தினால் வழிப்படுத்தப்படுகின்ற வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பிலான பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய கணக்குப் பதிவுகள் பற்றிய சகல நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்வதும், கண்காணிப்புச் செய்வதும், நிதி மற்றும் பொருட்களுக்குப் பொறுப்பாக இருப்பதும், மேற்படி நடவடிக்கைகள் தொடர்பிலான நிதி அறிக்கைகளைத் தயார் செய்து சமர்ப்பிப்பதும் கணக்குகள் பிரிவின் செயற்பணியாகும்.
திணைக்களத்தின் வேலைத்தளங்களின் உற்பத்திகள் மற்றும் நுகர்வோர் சேவைகளை தொடர்ச்சியாக பேணிவருவதற்குத் தேவையான மூலப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக பிரதான களஞ்சியம் மற்றும் பலகைக் களஞ்சியம் பேணிவரப்படுகின்றது.

# 8. 2017 ஆம் ஆண்டுக்கான திணைக்களத்தின் முன்னேற்றம்

## 8.1 2017 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய விசேட பணிகள்

### 8.1.1 நிருவாகப் பிரிவின் முன்னேற்றம்

- பொ.நி.சு. 03/2016 இற்கமைய சகல அலுவலர்களையும் உரிய சம்பளத் திட்டங்களின் கீழ் வைத்தல்.
- PL வகுதிக்கு உரித்தான ஊழியர்களை MT சம்பளத் திட்டத்திற்கு இணைப்புச் செய்யத் தேவையான அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்தமை.
- திணைக்களம்சார் பதவிகளான சட்ட அலுவலர், சட்ட உதவியாளர், கனிய அளவை உதவியாளர், வேலைத்தள மேற்பார்வையாளர், வேலைத்தள உதவியாளர், வேலைத்தள எழுதுநர், நேரக் கணிப்பீட்டு எழுதுநர், ஆரம்ப நிபுணத்துவ, பகுதியளவிலான நிபுணத்துவ மற்றும் நிபுணத்தும் அல்லாத பதவிகளை அங்கீகரித்துக் கொள்ளல்.
- வேலைத்தள எழுதுநர் /வேலைத்தள உதவியாளர் /நேரக் கணிப்பீட்டு எழுதுநர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை தற்போது MN1 சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### 8.1.2 வேலைகள் பிரிவின் முன்னேற்றம்

#### நீர் முகாமைத்துவ கதவுகள் மற்றும் அம்சங்களைத் தயார் செய்தல் மற்றும் புதுப்பித்தல்

#### அலிகொட்டாறு கருத்திட்டம்

03 உள்ளெடுக்கும் கதவுகள், அணைக்கட்டுக் கதவுகள் 04 மற்றும் அவசர கதவுகள் 04 ஐ நிர்மாணித்து பொருத்தியமை.
மேற்படி கதவுகள், உமா ஓயா கருத்திட்டத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற நீரைப் பயன்படுத்தி நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உத்தேச அலிக்கொட்டாறு நீர்த்தேக்கத்தில் பொருத்தப்படவுள்ளன. தற்போது 03 உள்ளெடுக்கும் கதவுகளை ஒன்றிணைத்துப் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.மி. 112.2 ஆகும்.

#### ஹந்தபானாகல கருத்திட்டம்

உமா ஓயா கீழ் பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஹந்தபானாகல நீர்த்தேக்கத்திற்கு 2 அணைக்கட்டுக் கதவுகள் மற்றும் 2 அவசர கதவுகளை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ.மி. 28.8 ஆகும் என்பதுடன், ஒரு அணைக்கட்டு கதவு ஏற்கெனவே நிர்மாணித்துப் பொருத்தப்பட்டுள்ளது.

#### ஊவ குடா ஓயா கருத்திட்டம்

குடா ஓயா நீர்த்தேக்கத்திற்கு ஒரு அணைக்கட்டு மற்றும் அவசர கதவொன்றை நிர்மாணிப்பதற்காக நீர்ப்பாசன திணைக்களத்திடமிருந்து கட்டளை கிடைத்துள்ளதுடன் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தெதுரு ஓயா கருத்திட்டம்**

தெதுரு ஓயா கருத்திட்டததினால் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான அம்சங்களை நிர்மாணித்தல்.

இந்த மின் உற்பத்தி நிலையத்திற்கு நீரை உள்ளெடுக்கும் கதவுகள் 03 நிர்மாணித்துப் பொருத்தப்பட்டுள்ளதுடன், அவற்றின் புதுப்பித்தல்களின் போதும் நீரைத் தடுத்துவைப்பதற்காகப் பயன்படுத்தும் கதவுகள் 03 உம் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

நீருடன் கலந்துவருகின்ற பலகைத் துண்டுகள் மற்றும் கழிவுகளைத் தடுத்துக் கொள்வதற்கான திரேஷ்ரெக் 03 உம் நிர்மாணித்துப் பொருத்தப்பட்டுள்ளன. மதிப்பீட்டுத் தொகை ரூ.மி. 23.4 ஆகும்.

**ஹிமதுராவ கருத்திட்டம்**

அம்பாரை மாவட்ட மக்களுக்குத் தேவையான குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் அமுல்படுத்தப்பட்டுள்ள மேற்படி கருத்திட்டத்திற்கு நீர்க் கட்டுப்பாட்டுக்கான 03 கதவுகள் மற்றும் மேல் உயர்த்தும் கட்டமைப்பு நிர்மாணித்துப் பொருத்தப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் தொகை ரூ.மி. 23.40 ஆகும்.

**நாச்சாதூவ கருத்திட்டம்**

அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள நாச்சாதூவ நீர்த்தேக்கத்திற்கு சீனச்சட்டி உலோகத்தினால் தயார் செய்யப்பட்ட 2 கதவுகள் மற்றும் 2 அவசர கதவுகள் பொருத்தப்பட்டன. மதிப்பீட்டுத் தொகை ரூ.மி. 20.50 ஆகும்.

**ராஜாங்கனய கருத்திட்டம்**

இதன் கீழ் 15 உள்ளெடுக்கும் கதவுகளை நிர்மாணித்துப் பொருத்துவதற்கு அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்திடம் 2016 ஆம் ஆண்டு பொறுப்பளிக்கப்பட்டது. அதற்கமைய 2017 ஆம் ஆண்டில் மேற்படி சகல கதவுகளும் தயார் செய்யப்பட்டு 5 நுழைவாயிற் கதவுகள் ராஜாங்கன வேலைத்தளத்தில் பொருத்தி முடிக்கப்பட்டன. கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம் ரூ.மி. 202.2 ஆகும்.

**தொண்டமானாறு கருத்திட்டம்**

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள நீர்ச் சிக்கலுக்கான தீர்வாக கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசனத்துறைக்கு மழை நீரை சேகரித்து வைப்பதற்கும், அவற்றுடன் உவர் நீர் கலப்பதை தடுப்பதற்குமாக தொண்டமானாறு பிரதேசத்தில் அணைக்கட்டு நுழைவாயில் கதவுகள் மூலம் ஒரு மதில் நிர்மாணிக்கப்பட்டது. உலக வங்கியின் உதவியின் கீழ் இந்த நுழைவாயில் கதவுகளை மீண்டும் புதிதாக பொருத்துவதற்கு அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்திடம் பொறுப்பளிக்கப்பட்டதுடன் இங்கு 18 கதவுகள் 2017 ஆம் ஆண்டில் துருப்பிடிக்காத இரும்பு மூலம் உற்பத்தி செய்யப்பட்டன. கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம் ரூ.மி. 243.9 ஆகும்.

## விசேட சேவைகள்

- தேசிய சுதந்திர தின வைபவத்தின் போது மரியாதை செலுத்துவதற்கான மேடை மற்றும் விசேட அதிதிகளுக்கான கூடத்தை ஆயத்தம் செய்தல்,

- வெளிநாட்டு தலைவர்கள் மற்றும் வெளிநாட:டு அலுலவர்களை வரவேற்பதற்காக சனாதிபதி செயலகத்தில் விசேட மேடையை நிர்மாணித்தல்.

- ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் உலர் வலயத்தில் மேற்பரப்பு நீர் வளத்தை மேம்படுத்தல் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டத்திற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் வவுனியா மாவட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பேயாறு நீர்த்தேக்கத்தின் நீர்க் கட்டுப்பாட்டு உள்ளெடுக்கும் கதவுகள் 03 மற்றும் அம்சங்களை வடிவமைத்து, நிர்மாணித்து பொருத்தும் உப ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டது. ஒப்பந்ததாரர் - BMG/KDAW கூட்டு முயற்சியாகும்.

- தேசிய மரபுரிமைகள் பற்றிய அமைச்சின் கீழ் அவுக்கன மற்றும் மாளிகாவில புத்தர் சிலைகளின் நீண்டகால நிலைத்திருத்தல் மற்றும் பாதுகாப்புக்காக அதன் மேற்புர கூரை நிர்மாணித்து முடிக்கப்பட்டது.



மொரான கருத்திட்டத்திற்கு 03 உள்ளெடுக்கும் கதவுகளை நிர்மாணித்துப் பொருத்தல்



ஊவா குடா ஓயா கருத்திட்டத்திற்கு 02 உள்ளெடுக்கும் கதவுகளை நிர்மாணித்துப் பொருத்தல்



ராஜாங்கனய கருத்திட்டத்திற்கு 15 உள்ளெடுக்கும் கதவுகளை நிர்மாணித்துப் பொருத்தல் மற்றும் மேலே உயர்த்தும் கட்டமைப்பை புதுப்பித்தல்





தொண்டமானாறு கருத்திட்டத்திற்கு 18 அணைக்கட்டு கதவுகளை நிர்மாணித்துப் பொருத்தல்



அலிக்கொட்டாறு – வெல்லவாய் கருத்திட்டத்திற்கு 03 உள்ளெடுக்கும் கதவுகளை நிர்மாணித்துப் பொருத்தல்



ஹந்தபானாகல ஓய கருத்திட்டத்திற்கு 02 அணைக்கட்டுக் கதவுகளை நிர்மாணித்துப் பொருத்தல்

### 8.1.3 சந்தைப்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் முன்னேற்றம்

- தொண்டமனாறு களப்பில் நீர் கட்டுப்பாட்டுக்கான 08 கதவுகளை வடிவமைத்தல்.
- தொண்டமனாறு களப்பின் நீர்க் கதவுகள் மற்றும் ராஜாங்கன நீர்க் கதவுகள் புதிதாக வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. மொரான நீர்த்தேக்கக் கருத்திட்டம், குடா ஓயா நீர்த்தேக்கம் போன்ற நீர்த் தேக்கங்களுக்கும் புதிய கதவுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- அரசாங்கத்தின் கட்டளை மற்றும் வெளிநாட்டு உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்கு போட்டித்தன்மையுடன் கூடிய கேள்வி கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதில் பங்கேற்றல். உதாரணமாக ராஜாங்கனய நீர்த்தேக்கத்தில் நீர்க் கதவுகளை புதிதாக நிர்மாணித்து பொருத்தல், மொரான நீர்த்தேக்கத்தின் பிரதான கால்வாய் கதவுகளை நிர்மாணித்துப் பொருத்துவதற்கு போட்டித்தன்மைமிக்க விலைமனுக்களை சமர்ப்பித்து அப்பணிகளைப் பெற்றுக் கொண்டமை.
- கருத்திட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான பல்வேறு வேலைத்தளங்களின் பணிகளுக்காக 292 மதிப்பீடுகள் தயார் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.
- வைத்தியசாலை கட்டில்கள் மற்றும் நவீனமயப்படுத்தல்கள், எம்போசின் இயந்திரங்கள் சுயமாக இயங்கச் செய்வதற்கு செயற்பட்டமை.
- பொருட்கள் மற்றும் சேவைகளின் விபரங்களை உள்ளடக்கிய ஆவணங்கள் மற்றும் விலை மனுக்களை நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்தல்.
- கண்காட்சிகளில் பங்கேற்றல்.

### 8.1.4 நடவடிக்கை பிரிவின் முன்னேற்றம்

- கருத்திட்டங்கள் மற்றும் உற்பத்திகளின் விபரங்களை உள்ளடக்கிய கையேட்டைத் தயார் செய்தமை.
- வழங்கல் அலகுக்கு 2017 ஆம் ஆண்டில் உள்நாட்டு கட்டளைகள் 976 உம், களஞ்சிய கட்டளைகள் 119 உம், மூலதன செலவினங்கள் 81 உம் கிடைத்துள்ளன. இந்தக் கட்டளைகளின் முன்னேற்றம் முறையே 73%,65% மற்றும் 88% ஆகும். வழங்கல் பெறுமதி ரூ.மி. 170.15 ஆகும்.
- தகவல் தொழில்நுட்ப அலகினால் கணினி வலையமைப்பு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட கணினிகளின் சகல பராமரிப்பு நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டதுடன், கணினி வலையமைப்பானது வேலைத்தளங்கள் மற்றும் களஞ்சியங்கள் வரை விஸ்தரிக்கப்பட்டது.

- பாதுகாப்பு அலகினால் அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் ஆதனங்கள் மற்றும் ஆட்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. ரக்னா லங்கா பாதுகாப்புச் சேவையானது ஓய்வுபெற்ற முப்படை வீரர்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதுடன், அவர்கள் பாதுகாப்புக் கடமைக்கான விசேட பயிற்சியைப் பெற்றவர்களாக உள்ளனர்.
- பயற்சி அலகினால் ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 80% ஆன முன்னேற்றம் இதில் அடையப்பெற்றுள்ளது.

## 8.1.5 கணக்குகள் பிரிவின் முன்னேற்றம்

### செய்த வேலைகள் முற்பணக் கணக்கு

2017 ஆம் ஆண்டுக்கான புரள்வு ரூபா 437,681,106.51 ஆகும் என்பதுடன், தேறிய இலாபம் ரூபா 101,057,759.07 ஆகும். இது புரள்வின் சுமார் 23% ஆகும்.

### களஞ்சிய முற்பணக் கணக்கு

2017 ஆம் ஆண்டினுள் வழல்கலின் பெறுமதி ரூபா 167,847,539.74 ஆகும் என்பதுடன், நி.பி. 501(அ) இற்கமைய களஞ்சிய முற்பணம் நட்டம் எதிர்பார்க்கப்படாததுடன், இலாபம் எதிர்பார்த்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை.

## 9. சவால்களும், ஏனைய தடைகளும்

- வெளிநாட்டு உதவிகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள பாரியளவிலான கருத்திட்டங்களுக்காக அரசாங்க நிறுவனங்களுக்கு போட்டித்தன்மை மிக்க விலை மனுக்களை சமர்ப்பிக்க வாய்ப்பளிக்காமை மற்றும் மேற்படி பணிகளை தனியார் நிறுவனங்கள் ஊடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளமை.

- சந்தையில் காணப்படுகின்ற தரம் குறைவான மற்றும் விலை குறைவான பொருட்களுடன் போட்டியிடுவது கடினமாக உள்ளதனால் தனியார் நிறுவனங்கள் பின்பற்றுகின்ற உபாயமுறைகள் மற்றும் ஏனைய சந்தைப்படுத்தல் முறைகளை பின்பற்ற முடியாமை.

- இயந்திரப் பொறியியல்சார் உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்குத் தேவையான மூலப் பொருட்கள் மற்றும் அம்சங்கள் சந்தையில் பரவலாக கிடைக்காமையினால் உற்பத்தி செய்து பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளமை மற்றும் பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்படுவதனால் அம்சங்கள் மற்றும் மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படுதல் மற்றும் ஒருசில அம்சங்களை இடைமுறையில் திட்டமிட்டு கட்டளையிட முடியாமையினாலும் ஏற்படுகின்ற தாமதங்கள் (சில வேளை மாதிரிகளை சமர்ப்பிக்க வேண்டி ஏற்படுகின்றது.)

- தொழில்நுட்ப மற்றும் அலுவலக பதவியணியின் வெற்றிடங்கள் நீண்டகாலமாக காணப்பட்டு வருகின்றமை மற்றும் உரிய நேரத்திற்கு நிரப்புவதற்கான பொறிமுறை இல்லாமை.

- புதிய தொழில்நுட்பத்தைக் கொண்ட இயந்திரசாதனங்களை பெற்றுக் கொள்வதன் மூலம் வினைத்திறன் மற்றும் உற்பத்தியை மேம்படுத்தல். இதற்கான பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- நிறுவன வளங்களை திட்டமிடும் (ERP) மென்பொருளைத் தாபித்து நிருவாகப் பணிகளை வினைத்திறன்மிக்கதாக்குதல்.

- 2018 ஆம் ஆண்டில் ISO 9001: 2008 செயலிழப்பதுடன் ISO 9001: 2015 ஐப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன், அதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இயந்திரப் பொறியியல் நிர்மாணச் சேவைகள் மற்றும் உற்பத்திகளுக்கான சந்தைத் தரம் இல்லாமை மற்றும் இது தொடர்பில் ஆராய்வதற்கான ஒழுங்குறுத்தும் நிறுவனம் இல்லாமை.

- பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்கு அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டியுள்ள நிதி உரிய காலப்பகுதிக்குள் கிடைக்காமை.

## 10.செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

10.1 நிறுவன மட்டத்தில் நல்ல நிதிக் கட்டுப்பாட்டின் மூலம் செலவினத்தைக் குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.

10.2 2016.09.23 ஆம் திகதி முதல் நிறுவனத்தை மறுசீரமைப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற அலுவலர்களின் பதவி உயர்வுகளை உரிய காலப்பகுதிக்குள் பெற்றுக் கொடுப்பதன் மூலம் மென்மேலும் வினைத்திறன்மிக்க சேவையைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். வேலைத்தளங்களின் பதவியணியினரின் அறிவு, திறமை மற்றும் சேவைக் காலத்திற்கு அமைய தொழில்நுட்ப சேவை மட்டங்களுக்கு இணைப்புச் செய்வதன் மூலம் வினைத்திறனும், விளைதிறனும்மிக்கவாறு செயலாற்றுகையை மேம்படுத்தத் திட்டமிடல்.

10.3 நிறுவனத்தின் வேலைசார் ஆற்றலை வளர்ப்பதற்கான கருத்திட்டப் பிரேரணைகளை சமர்ப்பித்தல். கருத்திட்டப் பிரேரணைகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், நிறுவன வளங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக கணினி மென்பொருட்களை அறிமுகம் செய்யத் திட்டமிடல் வேண்டும்.

10.4 ISO 9001:2015 தரக் கட்டமைப்புச் சான்றிதழை வென்றெடுத்தல்.